TNKR080000012013

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**
**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் தேதி செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு எண்.78/2013**

**CNR No.TNKR08-000001-2013**

வளர்மதி ... வாதி

**/எதிர்/**

1. இராமானுஜரெட்டியார் (இறப்பு)*
2. சரோஜா
3. வெங்கட்ராமன்
4. செந்தமிழ்செல்வி
5. தாயாரம்மாள் ... பிரதிவாதிகள்

*(இ.ம.எண்.118/2020 நாள் : 29.7.2024 உத்தரவின் படி
ஐந்தாவது பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார்)
**(இ.ம.எண்.4/2025 நாள் : 1.2.2025 உத்தரவின் படி
தாவா பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தினை ஐந்து சம பாகங்களாக பிரித்து, அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும் என முதல்நிலை தீர்ப்பாணைக்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 21.08.2013 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 13.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 17.03.2026 |
| வாதிக்காக | : | திரு.P.சரவணன் – வழக்கறிஞர் |

| | | |
|---|---|---|
| முதல் பிரதிவாதி | : | இறந்துவிட்டார் |
| இரண்டு, நான்கு பிரதிவாதிகள் | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள். |
| மூன்றாவது பிரதிவாதிகளுக்காக | : | திரு.N.மனோகரன் – வழக்கறிஞர் – ஆஜராகி, பின்னிட்டு தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். |
| ஐந்தாவது பிரதிவாதிக்காக | : | திரு.J.மாதவன் – வழக்கறிஞர் |

**1) திருத்தப்பட்ட பிராதின் சுருக்கம் :–**

ஒரு ராமானுஜரெட்டியார் (D1), தாயாரம்மாள் (D5) தம்பதியனருக்கு வளர்மதி (வாதி), சரோஜா (இரண்டாவது பிரதிவாதி), வெங்கட்ராமன் (மூன்றாவது பிரதிவாதி), தமிழ்செல்வி (நான்காவது பிரதிவாதி) ஆகியோர்கள் வாரிசுதாரர்கள். வழக்கு சொத்தானது ஆதியில் மேற்படி முதல் வாதியின் தகப்பனாரான கிருஷ்ணரெட்டியாருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டு, அவர் அனுபவம் செய்து வந்து, அவரது இறப்பிற்கு பின்னர் குடும்ப மேலாளர் என்கின்ற கோதாவில் முதல் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு, ஆண்டு அனுபவம் செய்து வந்த நிலையில், இரண்டு முதல் நான்கு பிரதிவாதிகள் சேர்ந்து முதல் பிரதிவாதியை கடந்த 20.12.2012–ம் தேதி அவர்கள் பெயருக்கு சொத்துக்களை எழுதிக்கொடுக்க கட்டாயப்படுத்தி வந்த நிலையில், கடந்த 20.01.2013–ம் தேதி வாதி அவருக்குரிய பாகத்தினை முதல் பிரதிவாதியிடம் கேட்க, அதற்கு முதல் பிரதிவாதி மறுத்துள்ளார். எனவே, வழக்கு சொத்தானது பூர்வீக சொத்து என்பதால், வழக்கு சொத்தினை ஐந்து சமபாகங்களாக பிரித்து, அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும் என முதல்நிலை தீர்ப்பாணைக்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–**

வாதி வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. முதல் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. வாதிக்கு தாவா சொத்துக்களில் எவ்வித

பாகமும் கிடைக்கத்தக்கதல்ல. 08.07.2009–ம் தேதி வாதிக்கு எழுதிவைத்த ரிஜிஸ்டர் செட்டில்மெண்டில் ஆவணம் அமுலுக்கு வராததால் மேற்படி ஆவணத்தை 02.01.2013–ம் தேதி அன்று முதல் பிரதிவாதி ரத்து செய்துவிட்டார். கடந்த 15.10.2012 மற்றும் 13.12.2012 ஆகிய தேதிகளில் தாவா சொத்தை பொறுத்து முதல் பிரதிவாதியும், அவரது மனைவியும் சேர்ந்து மூன்றாவது பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். மேற்படி சங்கதி வாதிக்கு தெரியும். கடந்த 08.07.2009–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை முதல் பிரதிவாதி ரத்து செய்துவிட்டபடியால், மேற்படி விரோதத்தினை மனதில் வைத்துக்கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னரே உரிய சீர்வரிசை செய்யப்பட்டு, திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, வாதியின் வழக்கினை முதல் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**3) மூன்றாவது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–**

வாதி வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. முதல் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. முதல் பிரதிவாதி குடும்ப மேலாளர் என்கின்ற கோதாவில் தாவா சொத்துக்களை பராமரித்து வந்தார் என்கின்ற சங்கதியை வாதியை நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். வாதியானவர் குளித்தலை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அ.வ.25/2013 என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளின் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள சங்கதியை இவ்வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் கடந்த 15.10.2012–ம் தேதி மூன்றாவது பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொடுக்க, அதன் அடிப்படையில் மூன்றாவது பிரதிவாதி பட்டா மாறுதல் செய்து ஆண்டு அனுபவம் செய்து வருகிறார். வாதியின் கணவரின் தூண்டுதல் மற்றும் துர்போதனைகளின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு மூன்றாவது பிரதிவாதி உழைத்து அதன் மூலம் கிடைத்த

வருமானத்தை கொண்டு 25 வருடங்களுக்கு முன்னர் சிறப்பாக திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. வாதியின் தாயார் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர். மேற்படியாரின் தரப்பினராக சேர்க்காத காரணத்தினாலும், சேர்க்கக்கூடாத சொத்தை சேர்த்த காரணத்தினாலும், சேர்க்க வேண்டிய சொத்தை சேர்க்காத காரணத்தினாலும் இவ்வழக்கானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே, வாதியின் வழக்கினை மூன்றாவது பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**4) ஐந்தாவது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–**

வாதி வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. முதல் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. ஐந்தாவது பிரதிவாதி அவருக்குரிய 6–ல் ஒரு பாகத்தை பெறுவதற்கு உரிமையுடையவர் ஆவார். வாதியின் வழக்கு மூலம் தவறானது. எனவே, வாதியின் வழக்கினை ஐந்தாவது பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**5) வழக்குரை, எதிர்வழக்குரை வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது.**

1 தாவா சொத்துக்கள் வாதியின் பாட்டனார் கிருஷ்ணரெட்டியாரின் பூர்வீக குடும்ப சொத்துக்கள் ஆகும்?

2 தாவா சொத்துக்களைப் பொறுத்து 3–ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டதாகக் கூறுவது சரியா?

3 வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/5 பங்கு பாகம் பிரித்து கிடைக்கக்கூடியதா?

4 இதர பரிகாரங்கள் யாவை?

6) வாதி தரப்பில், வாதி வளர்மதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

7) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

8) பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், வாதியின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

9) **எழுவினா இரண்டிற்கான தீர்வு :–**

*(2) தாவா சொத்துக்களைப் பொறுத்து 3–ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டதாகக் கூறுவது சரியா?*

வாதி அவரது வழக்குரையில் வழக்கு சொத்தானது ஆதியில் முதல் பிரதிவாதியின் தகப்பனாரான கிருஷ்ணரெட்டியாருக்கு பாத்தியப்பட்டதாகவும், பின்னர் அவரது இறப்பிற்கு பின்னிட்டு வழக்கு சொத்தினை மேற்படி முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வந்ததாகவும் கூறியுள்ள நிலையில், மூன்றாவது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில், மேற்படி வழக்கு சொத்தினை பொறுத்து முதல் பிரதிவாதி மற்றும் அவரது மனைவியான ஐந்தாவது பிரதிவாதி ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து மூன்றாவது பிரதிவாதிக்கு கடந்த 15.10.2012 ம் தேதி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் சொத்தினை ஒப்படைவு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அவ்விதத்தில், மூன்றாவது பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியவாறு முதல் பிரதிவாதியும், ஐந்தாவது பிரதிவாதியும் சேர்ந்து மூன்றாவது பிரதிவாதிக்கு கடந்த 15.10.2012–ம் தேதி அன்று தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார்கள் என்கின்ற சங்கதியையும், அதன்அடிப்படையில் வழக்கு சொத்தினை மூன்றாவது பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்ய வேண்டிய சுமையானது மூன்றாவது பிரதிவாதியை

சேர்ந்தது. மேற்படி சங்கதிக்கு ஆதரவாக மூன்றாவது பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், அவர் அசல் வழக்கில் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார். ஐந்தாவது பிரதிவாதி தரப்பில், வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவருக்கு ஆதரவாக எவ்வித பதிலும் பெறப்படவில்லை. எதிர்வழக்குரையில் ஒரு சங்கதியை தெரிவித்தாலேயே அதனை நிரூபணம் செய்யப்பட்ட பொருண்மையாக கருத இயலாது. எனவே, மூன்றாவது பிரதிவாதி கூறுவது போன்று வழக்கு சொத்தினை முதல் பிரதிவாதியான ராமானுஜரெட்டியாரும், ஐந்தாவது பிரதிவாதியான தாயாரம்மாளும் சேர்ந்து மூன்றாவது பிரதிவாதியான வெங்கட்ராமனுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார்கள் என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்யப்படவில்லை. இவ்வாறாக, எழுவினா இரண்டிற்கு விடை காணப்படுகிறது.

**10) எழுவினா ஒன்றிற்கான தீர்வு :–**

*(1) தாவா சொத்துக்கள் வாதியின் பாட்டனார் கிருஷ்ணரெட்டியாரின் பூர்வீக குடும்ப சொத்தக்கள் ஆகும்?*

வாதி அவரது வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் ஆதியில் முதல் பிரதிவாதியின் தகப்பனாரான கிருஷ்ணரெட்டியாருக்கு பாத்தியப்பட்டு, அவர் இறப்பு வரை அனுபவம் செய்து வந்து, அவரது இறப்பிற்கு பின்னிட்டு முதல் பிரதிவாதி குடும்ப மேலாளர் என்கின்ற கோதாவில் அனுபவம் செய்து வந்ததாக கூறப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை பொறுத்து வா.சா.ஆ.1 முதல் வா.சாஆ.4 வரையிலான ஆவணங்களில் கிருஷ்ணரெட்டியாரின் மகன் ராமானுஜம் பெயரில் உள்ளது. மேற்படி முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், அவரின் மூதாதையருக்கு பாத்தியப்பட்டது என்கின்ற சங்கதியை மறுத்துள்ளபோதிலும், மேற்படி சொத்தானது முதல் பிரதிவாதியின் மூதாதையருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்கின்ற எவ்வித குறிப்புகளும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், மூன்றாவது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் தரப்பினர்களின் உறவுமுறைகளை ஒப்புக்கொண்டுள்ளபோதிலும், மேற்படி சொத்தானது பூர்வீக சொத்து என்கின்ற சங்கதி மறுக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்வழக்குரையில் மேற்படி சொத்தானது 1 மற்றும் 5 வது

பிரதிவாதிகளுக்கு எவ்விதத்தில் பாத்தியப்பட்டு மூன்றாவது பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்துள்ளார்கள் என்று குறிப்பிடவில்லை. வா.சா.1–ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்களின் அடிப்படையிலும் வழக்கு சொத்தானது வாதியின் பாட்டனார் கிருஷ்ணரெட்டியாருக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என எழுவினா ஒன்றிற்கு விடை காணப்படுகிறது.

**11) எழுவினா மூன்றிற்கான தீர்வு :–**

*(3) வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/5 பங்கு பாகம் பிரித்து கிடைக்கக்கூடியதா?*

வழக்கு சொத்தானது இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்கின்ற சங்கதியையும், மேற்படி வழக்கு சொத்தினை பொறுத்து வாதிக்கு பிரதிவாதிகள் பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்கின்ற சங்கதியையும், வாதி தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளார். எனவே, வழக்கு சொத்தை பொறுத்து வாதி பாகம் பெறுவதற்கு உரிமையுடையவர் என எழுவினா மூன்றிற்கு விடை காணப்படுகிறது.

**12) எழுவினா நான்கிற்கான தீர்வு :–**

*(4) இதர பரிகாரங்கள் யாவை?*

ஒன்று முதல் மூன்று எழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு வழக்கின் செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என எழுவினா நான்கிற்கு விடை காணப்படுகிறது.

**13) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** வழக்கு சொத்தினை நலந்திகடு கலந்து ஐந்து சமபாகங்களாக பிரித்து, அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**(இ)** செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN Date: 2026.03.17 17:25:39 +0530

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – வளர்மதி (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | பட்டா எண்.1198–க்குரிய பட்டா |
| வா.சா.ஆ.2 | பட்டா எண்.1996–க்குரிய பட்டா |
| வா.சா.ஆ.3 | பட்டா எண்.529–க்குரிய பட்டா |
| வா.சா.ஆ.4 | பட்டா எண்.102–க்குரிய பட்டா |
| வா.சா.ஆ.5 | மின் கட்டண இரசீது |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–** இல்லை
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN Date: 2026.03.17 17:25:42 +0530

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**